தமிழ்நாடு அரசு

சுருக்கம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்-கணக்கு வைப்பு-புதிய கணக்கு வைப்பு நடைமுறை நூல் அறிமுகப்படுத்துதல்-ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி 2)துறை

அரசாணை(நிலை)எண். 8 நாள்: 6.1.1999

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையரின் நே.மு.க.எண்.61929/97/ எல்3 நாள் 17.7.98,7.10.98 மற்றும் 1.12.98.

-------

ஆணை:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்படும் கணக்கு வைப்பு முறையினை நவீனப்படுத்தி ஒரு புதிய முறையை உருவாக்குவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு, ஒரு வரைவு கணக்கு வைப்பு நடைமுறை நூலை தயாரித்து அளித்துள்ளது. இந்த வரைவு கணக்கு வைப்பு நடைமுறை நூல் குறித்து, நகராட்சி நிர்வாக ஆணையர், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் நிதித்துறையுடன் கலந்து பரிசீலிக்கப்பட்டது. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மற்றும் நிதித்துறை தெரிவித்த பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறை நூலில் தேவையான திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையர், புதிய கணக்கு வைப்பு நடைமுறை நூலை, 10 நகராட்சிகளிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும் நடைமுறைபடுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரையை ஏற்று புதிய கணக்கு வைப்பு நடைமுறை நூலை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறைபடுத்த முடிவு செய்து அதற்கிணங்க புதிய கணக்கு வைப்பு நடைமுறை நூலை 1.4.99 முதல் திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும் மற்றும் 10 நகராட்சிகளிலும் அறிமுகப்படுத்தலாம் என்றும், இந்த நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள், புதிய கணக்கு வைப்பு

முறையை பழகிக் கொள்ளும் வரையிலும் புதிய முறையுடன் பழைய கணக்கு வைப்பு முறையினையும் தொடர்ந்து பின்பற்றலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.548/சி.செ.(ஞா.தே.)/98 நாள் 16.12.98ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

எஸ்.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108.
ஆணையர், அனைத்து மாநகராட்சிகள் (மேயர் வழியாக)
ஆணையர், அனைத்து நகராட்சிகள் (நகர்மன்றத் தலைவர் வழியாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர், சென்னை 108.
நிதித்துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 6/1/99